# என்றும் இருப்பேன்

(மகாகவி பாரதியார் வாழ்க்கை - கவிதை நாடகம்)



சேதுபதி

SSP
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்

## அங்கம் - ஒன்று

*பாரதி : யது கிரி!

நான் ஒரு புதுவழி தேடிக் கொண்டிருக்கிறேன்...

யதுகிரி : அது என்ன வழி?

பாரதி : சாகாமல் இருக்க வேண்டும். அதைக் கண்டு பிடிக்கப் போகிறேன்.

யதுகிரி : எல்லா அதிசயமும் செய்யலாம். ஆனால், சாகாமல் இருக்க முடியாது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்! நீர் அதைக் கண்டு பிடித்தால் மிகவும் அதிசயமே!

பாரதி : நான் பிரயத்தனப் படுகிறேன். அது கட்டாயம் எட்டும் என்று தோன்றுகிறது.

---

* *யதுகிரி அம்மாள் எழுதிய 'பாரதி நினைவுகள்' நூலில் இருந்து பக்கம் 106.*



**கா**லத்தை மீறிக் கனவு கண்டவர் அல்லர் பாரதியார்;
காலத்தையே மாற்றவல்ல ஆற்றல் படைத்தவர்
அதற்கான வலிமையை வாழ்வில் இருந்து திரட்டிக் கொண்டவர்;

நாளும் செத்துப் பிழைக்கும் ஈனப் பிழைப்பைத்
'தூஉ'வென உமிழ்ந்து,
மரணமிலாப் பெருவாழ்வை மாந்தருக்குக் காட்டத்
தன்னையே ஒரு தனிப் பாத்திரமாக்கி அவர்
நடத்திக்காட்டிய வாழ்க்கை, நமக்கொரு நாடகம்;

பாருக்குள்ளே சமத்தன்மை – தொடர்
பற்றும் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது – புவி
எங்கும் விடுதலை செய்யும்,
பாரதி வாழ்க்கை ஒரு கவிதை நாடகம்!

ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 600 017.